# 12-09-2023 செய்தி

## இந்தியா – சவூதி இடையே 8 ஒப்பந்தங்கள் கையொப்பம்

- இந்தியா – சவூதி அரேபியா இடையிலான வியூக கூட்டாண்மை கவுன்சிலின் முதல் கூட்டம் தில்லியில் திங்கள் கிழமை நடைபெற்றது.
- பிரதமர் மோடி, முகமது பின் சல்மான் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், இரு நாடுகளுக்கும் இடையிலான கச்சா எண்ணெய், எரிவாயு சார்ந்த தற்போதைய கூட்டுறவை மேலும் விரிவாக்க ஒப்புக் கொள்ளப்பட்டது.
- அத்துடன், மகாராஷ்டிரத்தில் 50 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பீட்டில் (சுமார் ரூ.4 லட்சம் கோடி) செயல்படுத்தப்படும் மேற்கு கடற்கரை எண்ணெய் சுத்திகரிப்பு திட்டப் பணிகளை விரைவுபடுத்தவும் முடிவு செய்யப்பட்டது.
- எண்மமயமாக்கல், முதலீடு உள்பட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிக்க இரு நாடுகளுக்கும் இடையே 8 ஒப்பந்தங்கள் கையொப்பமாகின என்று இந்திய வெளியுறவு அமைச்சக (அயலக இந்திய விவகாரங்கள்) செயலர் ஔசஃப் சயீத் தெரிவித்தார்.

## வங்கக் கடலில் ஆய்வு செய்ய சமுத்ரயான் திட்டம்

**மத்ஸ்யா 6000**

- ஆழ்கடல் திட்டத்தின் ஒரு பகுதியாக, தேசிய கடல் தொழில்நுட்பக் கழகம்(என்ஐஓடி) 'சமுத்ரயான்' திட்டத்தை செயல்படுத்த திட்டமிட்டுள்ளது. இதற்கு 'மத்ஸ்யா 6000' என்று பெயரிடப்பட்டுள்ளது.

**நோக்கம்**

- முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்படும் இதில் 3 மனிதர்களை அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளது.
- கோபால்ட், நிக்கல், மாங்கனீஸ், ஹைட்ரோதெர்மல் சல்பைடு மற்றும் காஸ் ஹைட்ரேட்ஸ் உள்ளிட்ட தாதுப் பொருட்கள் வங்கக் கடலின் ஆழ்பகுதியில் இருக்கிறதா என ஆய்வு செய்வது தான் இந்த திட்டத்தின் நோக்கம்.
- என்ஐஓடி இயக்குநர் ஜி.ஏ.ராமதாஸ் கூறும் போது "மத்ஸ்யா திட்டம் 2026 ம் ஆண்டில் இறுதி கட்டத்தை எட்டும்.இந்த நீர்மூழ்கி வாகனத்தை 3 பேர் பயணிக்க வசதியாக 2.1மீட்டர் விட்டம் கொண்டதாக விஞ்ஞானிகள் உருவாக்கி உள்ளனர்" என்றார்.
- மத்ஸ்யா என்ற சமஸ்கிருத வார்த்தைக்கு மீன் என பொருள். விஷ்ணுவின் 10 அவதாரங்களில் முதலாவது அவதாரம் மச்ச அவதாரம் ஆகும். இதன் அடிப்படையில்தான் ஆழ்கடல் திட்டத்துக்கு மத்ஸ்யா என பெயரிட்டதாகக் கூறப்படுகிறது.

## நோவக் ஜோகோவிச் சாம்பியன்

- அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச், ரஷ்யாவின் டேனியல் மேதிவ் தேவ்யை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றார்.
- கிராண்ட் ஸ்லாம் தொடர்களில் ஜோகோவிச் வென்றுள்ள 24-வது பட்டம் இதுவாகும்.
- அமெரிக்க ஓபனில் ஜோகோவிச் பட்டம் வென்றது. இது 11 வது முறையாகும். 36 வயதான அவர் கடந்த 2011, 2015, 2016 ம் ஆண்டுகளிலும் கோப்பையை வென்றிருந்தார். மேலும் அமெரிக்க ஓபனில் அதிக வயதில் பட்டம் கைப்பற்றிய வீரர் என்ற பெருமையையும் ஜோகோவிச் பெற்றுள்ளார்.
- ஒட்டுமொத்தமாக கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஜோகோவிச் கைப்பற்றியுள்ள 24-வது பட்டம் இதுவாகும்.
- ஆஸ்திரேலிய ஓபனில் 10 முறையும், பிரெஞ்சு ஓபனில் 3 முறையும், விம்பிள்டனில் 7 முறையும் கோப்பையை வென்று குவித்துள்ளார்.
- ஜோகோவிச், இந்த ஆண்டில் அவர், ஆஸ்திரேலிய ஓபன், பிரெஞ்சு ஓபன் தொடர்களிலும் தற்போது அமெரிக்க ஓபனிலும் வாகை சூடியுள்ளார். விம்பிள்டன் ஓபன் இறுதிப் போட்டியில் ஸ்பெயினின் கார்லோஸ் அல்கரஸிடம் தோல்வி அடைந்திருந்தார்.